செ.வெ.எண்:25/2016 நாள்:12.11.2016

சிவகங்கை மாவட்டம்

இளையான்குடி தனியார் மருத்துவமனை வளாகத்தில் கைவிடப்பட்ட ஆண் குழந்தையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இஆ.ப., அவர்கள் முன்னிலையில் சிறப்பு தத்து வள மையத்தில் ஒப்படைப்பு

சிவகங்கை மாவட்டம், இளையான்குடியில் தனியார் மருத்துவமனை வளாகத்தில், சுமார் 10 நாட்களுக்குட்பட்ட ஆண் குழந்தை கைவிடப்பட்ட நிலையில் கிடந்ததை 02.11.2016 அன்று மாலை 6.15 மணி அளவில் அம்மருத்துவமனை மருத்துவரால் கண்டெடுக்கப்பட்டு, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலருக்கு அம்மருத்துவர் அளித்த தகவலின் அடிப்படையில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் பணியாளர்கள் 03.11.2016 அன்று குழந்தையை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

அக்குழந்தையை 09.11.2016 அன்று குழந்தைகள் நலக்குழுவில் ஆஜர்படுத்தப்பட்டு, குழந்தையின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் எதிர்கால நலன் கருதி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாநில சிறப்பு தத்து வள மையமான மதுரை, கிரேஸ் கென்னட் தத்து வள மையத்தில் ஒப்படைக்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மு.ஜெயபிரகாஷ் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

::வெளியீடு::
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.